கிறேம்—பத்து லட்சம் ரூபாய் செலவில்—நாள் ஒன்றுக்கு நூறு டன் கால்நடை தீவன உற்பத்தி செய்யக்கூடிய திறன் உடையதாக இது இருக்கும்.

திரு. கோவை செழியன்: இந்தியாவிலேயே—என்னுடைய காங்கேயம் தொகுதி கால்நடைக்குப் பெயர்போன பகுதி. இப்போது அந்தப் பகுதியில் கால்நடைத் தீவனம் இல்லாத காரணத்தினால்—திரு. மாணிக்கவாசகம் சொன்னதுபோல—குறைந்த விலைக்கே மாடுகளை விற்றுவிடுகிறார்கள். க்ரேசிங் லாண்டு என்று இருந்ததை எடுத்துவிட்ட காரணத்தினால்தான் இந்தக் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா மேய்ச்சல் பகுதிக்காக என விவசாயிகள் வைத்துக்கொள்ள அரசாங்கம் யோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மேய்ச்சல் தரை என்ற பெயரால் எத்தனை பேர் நிலங்களை ஒதுக்கி கொண்டு அதில் நெல்லே சாகுபடி செய்துவந்தார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு இதுபற்றிய மானியமே விவாதத்திற்கு வர இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: கேள்வி நேரமே இன்னும் 10 நிமிடங்கள் இருக்கின்றன. தயவு செய்து துணைக்கேள்வி போட அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு வருகிற மானியத்தின் கீழ் நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். இடையில் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. உரிமைப் பிரச்சினை இருக்கிறது. ஆகவே வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. இனி அடுத்து...

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) நடைமுறைக் கேள்விகள்

(அ) முதல் ஒரு மணி நேரம் முழுவதும் வினாக்கள் கேட்க அனுமதிக்காதது குறித்து

திரு. ஏ. சுப்பிரமணியம்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், நம்முடைய சட்டசபை விதியின்படி முதல் ஒரு மணி நேரம், சரியாக ஒரு மணி நேரம் கேள்விநேரத்திற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1974 ஏப்ரல் 3] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

அந்த ஒரு மணி நேரத்தைக் குறைப்பதற்கு சட்டமன்றமே முடிவெடுத்தால்தான் செய்ய முடியும். தாங்களாகவே குறைப்பது விதிகளின்படி சரியல்ல என்பது என்னுடைய கருத்து. இன்னும் கொஞ்சம் நேரம் துணைக் கேள்விகளை அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணி நேரத்திற்கு மேல் எடுக்கத்தான் பேரவையின் அனுமதி தேவையாக இருக்கிறது. கேள்வி நேரத்திற்குள்ளாகவே துணைக்கேள்வி இல்லையென்றால் கேள்வி நேரத்தை முடித்துக்கொள்ளும் நிலைமை இருக்கிறது. நான் எதற்காகச் சொன்னேனே அதன் பயனைக் கெடுத்துவிடுகிறீர்கள். இங்கே உள்ளாட்சித்துறை பற்றிய மானியக்கோரிக்கை வர இருக்கிறது, அதில் பேசுவதற்கு நிறைய உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் இடம் கொடுக்க வேண்டும், தவிர, ஒத்தி வைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம், உரிமைப் பிரச்னை ஆகியவை இருக்கின்றன. ஆகவே, உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கலாம் என்பதற்காகத்தான் அவ்வாறு செய்தேன்.

திரு. எம். சுரேந்திரன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். முக்கியமான கேள்வியாக இருப்பதால்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளையதினம் மானியக் கோரிக்கை வருவதால் அதில் பேசிக்கொள்ளலாம். அடுத்து டாக்டர் ஹாண்டே அவர்கள்,

3. உரிமைப் பிரச்சினை.

தன் கவன ஈர்ப்பு அறிவிக்கைக்கு கல்வி அமைச்சர் தவறான தகவல் அளித்ததாக டாக்டர் எச். வி. ஹாண்டே எழுப்பிய உரிமைப் பிரச்சினை.

MR. SPEAKER : Dr. Hande has given the following notice:

"I do hereby give notice of the privilege motion against the Hon. the Education Minister for giving an incorrect statement on 26th March 1974 in reply to my call attention notice on the plight of S.I.E.T. College students. The Minister in his reply had stated that there was a delay in the release of III term funds for the college, because the college authorities refused to submit to audit by the Government Auditing. But in today's Hindu a statement has been released by the Correspondent of the College